පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019

| தரம் |
| --- |
| 10 |

பாடம் :- புவியியல்

பாடசாலையின் பெயர் : ........................................................................................................

மாணவர் பெயர் / சுட்டெண் : ........................................................

.................................................................................................. நேரம் : 3.00 மணித்தியாலம்

## பகுதி – I

- இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.

Education NCP - www.edncp.lk

- **01** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

01. மிகப் பெரிய தொகுதியாகக் கருதப்படுகின்ற புவியின் மேற்பரப்பின் பரப்பளவு ............................. மில்லியன் சதுர கிலோ மீற்றர்களாகும்.
(520 / 510 / 560)

02. விண்வெளியிலிருந்து பூமியை நோக்கி வருகின்ற பெரும்பாலான விண்கற்கள் ........................................... மண்டலத்திலேயே எரிந்து அழிந்து விடுகின்றன.
(இடை / மாறன் / படை)

03. புவியோட்டின் தடிப்பானது ஒரே சீராகக் காணப்படுவதில்லை. இதன் தடிப்பானது கண்டங்களில் ...................... ...................................... கிலோ மீற்றர் வரையான ஆழத்தைக் கொண்டு விரிவடைந்துள்ளது.
(60 / 80 / 50)

04. ஆழமான சமுத்திரத்தில் எரிமலைச் செயற்பாடுகள் காரணமாக ............................................................ தீவு உருவாகியுள்ளது.
(ஜாவா / ஐஸ்லாந்து / தஸ்மேனியா)

05. அயன வலயத்தில் காணப்படும் விசேடமான காலநிலை அம்சமாக ........................................................ விளங்குகின்றது.
(மத்தியதரை / துந்திரா / மொன்சூன்)

06. ........................................................ உலகின் அதிகளவான கோதுமையை உற்பத்தி செய்கின்றது.
(சீனா / கஸகஸ்தான் / ஆர்ஜன்டீனா)

07. ........................................................ நாட்டின் ஒரு காட்டுப்பயிராகக் காணப்பட்ட இறப்பர் பின்னர் படிப்படியாக விரிவடைந்து பெருந்தோட்டப் பயிராக வளர்ச்சியடைந்தது.
(வியட்னாம் / பிறேசில் / மலேசியா)

08. பசுமைப் புரட்சியின் செல்வாக்குக் காரணமாக ………………………………….. களில் இலங்கையின் நெற்பயிர்ச் செய்கை விரைவாக விரிவடைந்துள்ளது.
(1980 / 1950 / 1960)

09. அரசு விவசாயத்தை மேம்படுத்துவதற்காக திவிநெகும, ……………………………………………………. ஆகிய வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தியது.
(கமிதிரிய / சமுர்த்தி / மகநெகும)

10. இரும்புருக்கு உற்பத்தியில் அதிகளவு பங்களிப்புச் செய்துள்ள நாடு ……………………………………………… ஆகும்.
(ஜப்பான் / ரஷ்யா / சீனா)

- **11** தொடக்கம் **15** வரை தரப்பட்டடுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து, அவை சரியாயின் **"ச"** யையும், பிழையாயின் **"பி"** யையும் சுற்றி வட்டம் வரைக.

11. சீயல் எனும் அடித்தளப் பாறைப்படையின் மீது சீமாப் படை அமைந்துள்ளது. (ச / பி)

12. மரியானா அகழி, மின்டோனா அகழி என்பன பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ளன. (ச / பி)

13. நெற்பயிர்ச் செய்கையில் தற்போது சேதன உரங்களின் பயன்பாட்டில் கூடிய கவனம் செலுத்தும் நாடு இந்தியா ஆகும். (ச / பி)

14. இலங்கையின் வரண்ட வலய நெல் உற்பத்திக்காக உயர் நிலப் பயிர்ச்செய்கையில் கொட வீ (Goda Vee) நீர்ப்பாசனம் பயன்படுத்தப்படுகின்றது. (ச / பி)

15. இலங்கையில் எருமை மாடுகள் $^2/_3$ பங்கு வரண்ட வலயத்திலேயே வளர்க்கப்படுகின்றன. (ச / பி)

- **16** தொடக்கம் **20** வரையுள்ள வினாக்களுக்கு **"அ"** மற்றும் **"ஆ"** என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. இந் நிரலில் உள்ளவற்றை அவற்றின் தொடர்புகளின் அடிப்படையில் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையினது **இலக்கத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

16. வளிமண்டலத்தின் படைகள் 'அ' நிரலின் கீழ் தரப்பட்டுள்ளன. அப்படைகளில் இடம்பெறும் முக்கிய நிகழ்வுகள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் பெறப்படும் சரியான விடை

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. மாறன் மண்டலம் | A – மின்னியல் செயற்பாடுகள் இடம்பெறும் |
| 2. படை மண்டலம் | B – வாயுக்களின் அளவு மிகக் குறைவு |
| 3. இடை மண்டலம | C – சாதாரண விமானம் பயணம் செய்யும் |
| | D – அதிவேக ஜெட்விமானம் பயணம் செய்யும் |

01. A,D,A    02. C,D,A    03. C,A,B    04. A,B,D    (………)

Education NCP - www.edncp.lk

17. உலகின் சில ஆறுகள் 'அ' நிரலின் கீழ் தரப்பட்டுள்ளன. அவை உற்பத்தியாகும் மூலங்கள் 'ஆ' நிரிலில் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் சரியான விடை

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. மகாவலி நதி | A – ஊற்றிலிருந்து |
| 2. தேம்ஸ் நதி | B – மலைப்பகுதி ஊற்றிலிருந்து |
| 3. றைன் நதி | C – ஏரியிலிருந்து |
| | D – உருகிய பனியிலிருந்து |

01. A,D,C 02. A,D,C 03. B,A,D 04. A,B,C (………)

18. உலகில் உள்ள கண்டங்கள் 'அ' நிரலில் தரப்பட்டுள்ளன. அதில் உள்ள முக்கிய ஏரிகள் 'ஆ' நிரலில் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் சரியான விடை

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. ஆசியா | A – தித்திக்கா ஏரி |
| 2. ஆபிரிக்கா | B – பைக்கால் ஏரி |
| 3. தென் அமெரிக்கா | C – விக்டோரியா ஏரி |
| | D – அயர் ஏரி |

01. B,C,A 02. C,A,D 03. A,B,D 04. B,A,C (………)

19. உலகின் சில பயிர்கள் 'அ' நிரலில் தரப்பட்டுள்ளன. அப்பயிர்கள் வளர்வதற்கான மண் வகைகள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றினை ஒழுங்குபடுத்தினால் பெறப்படும் சரியான விடை

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. கோதுமை | A – களித் தன்மையான செம்பூரான் மண் |
| 2. தேயிலை | B – வண்டல் மண் |
| 3. இறப்பர் | C – சேணாசம் மண் |
| | D – கபுக் கலந்த செம்மண் |

01. A,D,B 02. A,B,D 03. C,D,A 04. C,A,D (………)

20. உலகின் இரும்புருக்குக் கைத்தொழிலில் ஈடுபடும் நாடுகள் 'அ' நிரலில் தரப்பட்டுள்ளன. அந்நாட்டின் இரும்புருக்கு மையங்கள் 'ஆ' நிரலில் தரப்பட்டுள்ளன. அவற்றினை ஒழுங்குபடுத்தினால் பெறப்படும் விடை

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. சீனா | A – பீஜிங் பிரதேசம் |
| 2. ஐக்கிய இராச்சியம் | B – பிற்ஸ்பேர்க் பிரதேசம் |
| 3. ஐக்கிய அமெரிக்கா | C – பர்மிங்ஹாம் பிரதேசம் |
| | D – குஷ்நெட்ஸ் வலயம் |

01. C,B,A 02. A,C,B 03. A,B,D 04. D,C,A (………)

Education NCP - www.edncp.lk

- 21 தொடக்கம் 26 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

21. புவி மேற்பரப்பில் ............................................ சதவீதம் சமுத்திர நீர் பரம்பிக் காணப்படுகின்றது.

22. .............................................................. ஆபிரிக்க கண்டமேடையில் அமைந்துள்ள தீவு ஆகும்.


23. ................................................................ யில் சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ளது.

24. மலைப் பிரதேசங்களில் அமைந்துள்ள தட்டையான உயர்நிலம் ......................................................... எனப்படும்.

25. உலகின் அதிகளவு உற்பத்தி செய்யப்படுவதும் நுகரப்படுவதுமான தானியமாக .............................. ............................... மிக முக்கிய இடத்தினை வகிக்கின்றது.

26. 1 : 50 000 இடவிளக்கப்படத்தில் இலங்கை முழுவதும் .......................................... பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு தேசப்படங்கள் வரையப்பட்டுள்ளன.

- 27 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் வரைபடத்தினைப் பயன்படுத்துக.




Education NCP - www.edncp.lk

27. வரைபடத்தில் A- B கோட்டினால் ............................................................. சாய்வு ஒன்று குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

28. வரைபடத்தில் C – D கோட்டினால் குறித்துக் காட்டப்படும் நிலவுருவம் ......................................................

.................................... ஆகும்.

29. வரைபடத்தில் E – F கோட்டினால் குறித்துக் காட்டப்படும் நிலவுருவம் ………………………………………………

……………………………….. எனப்படும்.

30. வரைபடத்தில் G – H கோட்டினால் குறித்துக் காட்டப்படும் நிலவுருவம் ……………………………………………..

……………………………………………… ஆகும்.

- 31 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் **சரியான அல்லது மிகப்பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து அதனை குறித்து நிற்கும் **இலக்கத்தினை** எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

31. மையத்திலிருந்து முடியைப் பிரிக்கும் எல்லை
 01. படைத்தரிப்பு
 02. கூற்றன் பேர்க் தொடர்ச்சியின்மை
 03. மொஹோறோவிச் தொடர்ச்சியின்மை
 04. மாற்றரிப்பு

(………)

32. அவுஸ்திரேலியக் கண்ட மேடையில் அமைந்துள்ள தீவு
 01. ஜாவா
 02. மடகஸ்கார்
 03. தஸ்மேனியா
 04. இலங்கை

(………)

33. உலகிலே மிக உயர்ந்த இடத்தில் அமைந்துள்ள ஏரி
 01. தித்திக்கா ஏரி
 02. ஐம்பெரும் ஏரி
 03. பைக்கால் ஏரி
 04. சுப்பீரியர் ஏரி

(………)

34. ஆசியாவிற்கு வெளியில் நெற்பயிர்ச்செய்கை நடைபெறும் நாடு
 01. மியன்மார்
 02. தாய்லாந்து
 03. இந்தோனேசியா
 04. மடகஸ்கார்

(………)

35. இலங்கைக்கு தேயிலைப் பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்திய ஆங்கிலேயர்
 01. எட்வட் பான்ஸ்
 02. ஜேம்ஸ் டெயிலர்
 03. வில்லியம் கிரகரி
 04. ஆர்தர் கோடன்

(………)

36. வெற்றிலை ஏற்றுமதிக் கிராமம் அமைந்துள்ள இடம்
 01. கட்டுகம்பொல
 02. ராஜாங்கன
 03. தம்பதெனிய
 04. குருணாகல்

(………)

Education NCP - www.edncp.lk

37. 2012ம் ஆண்டில் இலங்கையின் ஊழியப் படையின் அதிக சதவீதத்தைக் கொண்ட துறை

01. கைத்தொழில் துறை
02. விவசாயத் துறை
03. சேவைத் துறை
04. மீன்பிடித் துறை

(………)

38. உலகின் இரும்புருக்கினை 2012 ம் ஆண்டில் அதிகளவில் இறக்குமதி செய்யும் நாடு

01. ரஷ்யா
02. மலேசியா
03. ஜப்பான்
04. ஐக்கிய இராச்சியம்

(………)

- 39 மற்றும் 40 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

A. பால் விகிதம்
B. வயது முதிர்ந்தோர் சனத்தொகை
C. வளி மாசடைதல்
D. பரும்படியான இறப்பு வீதம்
E. எரிபொருட் பயன்பாடு

39. ஒரு காரணியில் ஏற்படும் வீழ்ச்சியானது இன்னொரு காரணியில் அதிகரிப்பை ஏற்படுத்தும் என்பதனைக் குறித்துக் காட்டும் கூற்றுக்களைக் கொண்ட இரு எழுத்துக்களை உள்ளடக்கிய விடை

01. E மற்றும் C
02. B மற்றும் E
03. A மற்றும் D
04. D மற்றும் B

(………)

40. ஒரு காரணியில் ஏற்படும் அதிகரிப்பானது இன்னொரு காரணியில் அதிகரிப்பை ஏறபடுத்தும் எனக் குறித்துக் காட்டும் கூற்றுக்களைக் கொண்ட இரு எழுத்துக்களை உள்ளடக்கிய விடை

01. E மற்றும் C
02. A மற்றும் D
03. C மற்றும் D
04. B மற்றும் C

(………)

(40 × 1 = 40 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

**பகுதி II**

- ❖ இவ்வினாத்தாள் I, II என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- ❖ பகுதி I இலுள்ள வினா கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
- ❖ பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.
- ❖ எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

---

**பகுதி I**

1. (அ) 1:50 000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்கு தரப்பட்டுள்ளது. படத்தினை பரிசீலித்து அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. இல. (i) தொடக்கம் (iv) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(i) இலக்கம் (1) இனால் குறித்துக் காட்டப்பட்டுள்ள அம்சம்

(மணல் / கூம்புக் குன்று / பாறை) (01 புள்ளி)

(ii) இலக்கம் (2) இனால் குறித்துக் காட்டப்பட்டுள்ள அம்சம்

(வேறு பயிர்கள் / வீட்டுத்தோட்டம் / புதர்) (01 புள்ளி)

(iii) இலக்கம் 3) இனால் குறித்துக் காட்டப்பட்டுள்ள அம்சம்

(அகன்ற ஒற்றைப் புகையிராப் பாதை/ அகன்ற இரட்டைப் புகையிரதப் பாதை / ஒடுங்கிய புகையிரதப் பாதை) (01 புள்ளி)

(iv) இலக்கம் (4) இனால் குறித்துக் காட்டப்பட்டுள்ள அம்சம்

(புகையிரத நிலையம் / புகையிரதத் தரிப்பு / பாதுகாப்பான புகையிரதக் கடவை) (01 புள்ளி)

(v) இப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள பிரதான வர்த்தகப் பயிரினைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(vi) படப்பகுதியில் பிரதான நதி நெடுகிலும் விரிவடைந்து காணப்படும் நிர்வாக எல்லை யாது? (01 புள்ளி)

(vii) நாற்பக்கல் A இல் அமைந்துள்ள பொதுச் சேவை வழங்கும் இரண்டு அரசாங்க நிறுவனங்களைப் பெயரிடுக? (02புள்ளிகள்)

(viii) வடமேற்கு மூலையில் அமைந்துள்ள 322 பிரதான வீதியின் நீளத்தைக் km ல் குறிப்பிடுக. (01 புள்ளி)

(ix) F என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்படும் பண்பாட்டு அம்சம் என்ன? (01 புள்ளி)

Education NCP - www.edncp.lk

(ஆ) உமக்கு தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படத்தினை கவனமாகப் பரிசீலித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்கு உலகப்படத்தில் அருகே அமைந்துள்ள நிரல் பெட்டிகளைப் பயன்படுத்துக.

(i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. உலகப்படத்திலிருந்து ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைக் குறித்துக் காட்டும் எழுத்தினைத் தெரிவு செய்து அதனை அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரேயுள்ள பெட்டியில் எழுதுக.

I. கருங்கடல் - A,B,C

II. போக்லண்ட தீவு - D,E,F

III. டிரகன்ஸ்பேர்க் - G,H,I

IV. தித்திக்கா ஏரி - K,L,M

V. லீனா நதி - P,Q,R

(05 புள்ளிகள்)

(இ)உமக்கு தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தினை கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்கு இலங்கைப்படத்தில் அருகே அமைந்துள்ள நிரல் பெட்டிகளைப் பயன்படுத்துக.

(i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. இலங்கைப்படத்திலிருந்து ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைக் குறித்துக் காட்டும் எழுத்தினைத் தெரிவு செய்து அதனை அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரேயுள்ள பெட்டியில் எழுதுக.

I. தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள தலவாக்கலை - A,B,C

II. வவுனியா மாவட்டம் - D,E,F

III. தேவேந்திர முனை - G,H,I

IV. அகலவத்த இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - K,L,M


V. கொட்டியாரக் குடா - P,Q,R

(05 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

## பகுதி II

02. I.




வளிமண்டலத்தின் பிரதான வாயுக்களின் சேர்க்கை $A, B, C, D$ ஆகிய ஆங்கில எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ளன. அவற்றை முறையே குறிப்பிடுக.


(2 புள்ளிகள்)

II. படை மண்டலத்தின் மூன்று பிரதான பண்புகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

III. தற்காலத்தில் வளிமண்டலம் மாசுபடுவதற்குக் காரணமான மூன்று மானிட நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு, அவற்றில் ஒன்றினால் ஏற்படும் விளைவுகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(5 புள்ளிகள்)

03. உலகின் பிரதான காலநிலை வலயங்கள் அருகிலுள்ள வரைபடத்தில் காட்டப்படுகின்றது. அதனை நன்கு பரிசீலித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.




I. வரைபடத்தில் A மற்றும் B எழுத்துக்களினால் காட்டப்படும் காலநிலை வலயங்களை முறையே குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

II. உம்மால் மேலே (I) ல் பெயரிட்ட A காலநிலை வலயத்தின் விஷேட பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

III. a. பிற்பட்ட காலங்களில் பூகோள மட்டத்திலான காலநிலைப் பாகுபாட்டினை முன்வைத்த இரு நபர்களைக் குறிப்பிடுக.

b. தற்காலத்தில் காலநிலை மாற்றமடைவதற்குக் காரணமான பௌதீகக் காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விபரிக்குக.

(5 புள்ளிகள்)

04. I. ஆசியாவுக்கு வெளியில் நெல் பயிரிடப்படும் இரு பிரதேசங்களைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

II. உலக நெற்பயிர்ச்செய்கைக்கு சாதகமான பௌதீகக் காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

III. உலக நெற்பயிர்ச்செய்கையின் விஷேட பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை விபரிக்குக.

(5 புள்ளிகள்)

05. I. வர்த்தக ரீதியாக உலக பாற்பண்ணை உற்பத்தியில் ஈடுபடும் நாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

II. உலக பாற்பண்ணை விருத்திக்குப் பங்களிப்புச் செய்யும்

a. பௌதீகக் காரணி ஒன்றினையும்,

b. மானிடக் காரணி இரண்டினையும் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

III. உலக பாற்பண்ணையின் விஷேட பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை விளக்குக.

(5 புள்ளிகள்)

06. I. இலங்கையில் உயர் நிலத்தேயிலை பயிரிடப்படும் இடம் ஒன்றினையும், மத்திய நிலத்தேயிலை பயிரிடப்படும் இடம் ஒன்றினையும் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

II. இலங்கையின் தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு சாதகமான பௌதீகக் காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

III. (a) இலங்கைத் தேயிலையைக் கொள்வனவு செய்யும் மத்திய கிழக்கு நாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(b) தேயிலைப் பயிர்ச்செய்கையை விருத்தி செய்வதனால் ஏற்படும் பொருளாதாரப் பயன்கள் இரண்டினைக் குறிப்பிட்டு ஒன்றை விபரிக்குக.

(5 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk


07. I. இலங்கையின் கடல்நீர் மீன்பிடியின் பிரதான இரண்டு பிரிவுகளையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

II. இலங்கையின் ஆழமற்ற கடலில் மீன்கள் அதிகமாகக் காணப்படுவதற்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

III. (a) இலங்கையின் கரையோரப் பகுதியில் உள்ள சிறிய மீன் இனங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(b) மீன்பிடிக் கைத்தொழிலின் முக்கியத்துவங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு ஒன்றினை விபரிக்குக. (5 புள்ளிகள்)

08.




Education NCP - www.edncp.lk


I. உலகின் இரும்புருக்கு உற்பத்தி செய்யும் நாடுகள் மேலே உள்ள உலகப்படத்தில் $A, B, C, D$ ஆகிய ஆங்கில எழுத்துக்களினால் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்நாடுகளை முறையே குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

II. கைத்தொழில் அமைவிடத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)


III. a. இரும்புருக்கின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

b. இரும்புருக்கின் போக்குகள் இரண்டினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. (5 புள்ளிகள்)

01) ஆ.




இ.




Education NCP - www.edncp.lk

விடைகள்

தரம் - 10

புவியியல்

இரண்டாந் தவணைப் பரீட்சை - 2019

**பகுதி – I**

| | | | |
|---|---|---|---|
| 01) 510 | 02) படை | 03) 60 | 04) ஐஸ்லாந்து |
| 05) மொன்சூன் | 06) சீனா | 07) பிறேசில் | 08) 1960 |
| 09) கமிதிரிய | 10) சீனா | 11) பி | 12) ச |
| 13) பி | 14) ச | 15) ச | 16) 2 |
| 17) 3 | 18) 1 | 19) 4 | 20) 2 |
| 21) 97.5% | 22) மடகஸ்கார் | 23) மாத்தளை | 24) மேட்டுநிலம் |
| 25) கோதுமை | 26) 92 | 27) குழிவுச்சாய்வு | 28) கூம்புக்குன்று |
| 29) கணவாய் | 30) சுவடு | 31) 2 | 32) 3 |
| 33) 1 | 34) 4 | 35) 2 | 36) 1 |
| 37) 3 | 38) 4 | 39) 4 | 40) 1 |

**பகுதி – I**

01) அ. 1. பாறை
2. வேறுபயிர்கள்
3. அகன்ற இரட்டைப் புகையிரதப்பாதை
4. புகையிரத நிலையம்
5. தென்னை
6. மாகாண எல்லை
7. நீதிமன்றம், பாடசாலை
8. $0.75\ km$
9. பௌத்த விகாரை

ஆ. I. B
II. D
III. H
IV. M
V. P

இ.

I. A
II. E
III. I
IV. L
V. P

02) i. A. நைதரசன்
B. ஒட்சிசன்
C. ஆகன்
D. காபனீரொட்சைட்டு

ii. படை மண்டலத்தின் மேல் எல்லையானது கடல் மட்டத்திலிருந்து $48 - 50\ km$ வரை பரந்துள்ளது.
- வெப்பநிலை மேலே செல்லச் செல்ல படிப்படியாக அதிகரிக்கும்
- உயிர்க் கோளத்தின் நிலைப்பிற்கு $20 - 30\ km$ க்கு இடையில் ஓசோன் படை அமைந்துள்ளது.
- சூரியனில் இருந்து வரும் புற ஊதாக் கதிர்களை ஓசோன் படை பூமியை நோக்கி வர விடாமல் தடை செய்கின்றது.
- இப்பகுதியில் வெப்பநிலை அதிகரிப்பில் ஓசோன் படை செல்வாக்குச் செலுத்துகின்றது
- விண்வெளியில் இருந்து பூமியை நோக்கி வருகின்ற விண்கற்கள் படை மண்டலத்திலேயே எரிந்து அழிந்து விடுகின்றன.
- அதிவேக ஜெட்விமானங்கள் இப்படையின் மத்திய பகுதியில் பயணம் செய்கின்றன.
- படை மண்டலத்தின் மேல் எல்லையானது படைத்தரிப்பு என அழைக்கப்படும்

iii. காடுகளை எரித்தல்
- உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் பாவணை
- கிருமி நாசினிப் பாவணை
- குப்பைகளை எரித்தல்
- அணு ஆயுதப் பரிசோதனை
- தொழிற்சாலைப் புகை
- வாகனப் புகை

03) i. A. அயண வலயம்
B. இடை வெப்ப வலயம்

ii. கடகக் கோட்டிற்கும் ($23\,{}^{1}/_{2}\,°$) மகரக் கோட்டிற்கும் ($23\,{}^{1}/_{2}\,°$) இடையில் அமைவு பெற்றிருக்கும்
- வருடம் முழுவதும் உயர் வெப்பநிலை நிலவும் ($18℃$ ஐ விட அதிகம்)
- மாரிகாலம் இல்லை
- பெருமளவு பிரதேசங்கள் வருடம் பூராகவும் மிக உயர்ந்த மழைவீழ்ச்சியை கொண்டிருக்கின்றன.
- அமேசன், கொங்கோ காடுகளும், சகாரா, அரேபியா, தார், பெரிய அவுஸ்திரேலியா பாலைவனங்களும் காணப்படுகின்றன.
- புல்வெளிகளும் அமைவு பெற்றுள்ளன.
- விஷேட காலநிலை அம்சமாக மொன்சூன் விளங்குகின்றது.

iii. a. ஒஸ்ரின் மில்லர
- தோன்வைற்
- கெப்பன்

b. காட்டுத் தீ ஏற்படல்
- எரிமலை வெடிப்பு
- வரட்சி
- சூரைப் புயல்
- சூரியக் கரும்புள்ளி

04) i. இத்தாலியின் போ நதி வடிநிலம்
- ஆபிரிக்காவில் நைல் நதிக் கழிமுகம்
- வட அமெரிக்காவில் மிசிசிப்பியும் சக்ரமன்றோ ஆற்றுப் பள்ளத்தாக்கும்
- அவுஸ்திரேலியாவின் மறேடார்லிங் பள்ளத்தாக்கு
- மடகஸ்கார்

ii. 27℃ வரையிலான வெப்பநிலை
- $2000\,mm$ மழைவீழ்ச்சி
- வண்டல் மண்
- தாழ்வான சமவெளிப் பிரதேசம்

iii. சிறிய நிலப்பரப்பில் பயிர்செய்யப்படல்
- சில நாடுகளில் வர்த்தக நோக்கில் பரந்தளவில் பயிர் செய்யப்படல்
- இந்தியா, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், தாய்லாந்து, வியட்னாம் போன்ற நாடுகளில் வர்த்தக நோக்கில் பயிரிடப்படல்
- ஆசியாவில் பெரும்பாலும் ஊழியர் செறிவு கொண்டதாகவும், ஆசியாவுக்கு வெளியில் இயந்திரப்பயன்பாடு கொண்டதாகவும் காணப்படுகின்றது. தற்போது ஆசியாவிலும் இயந்திரப் பயன்பாடு அண்மைக்காலங்களில் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணம் :- இந்தியா
- தற்போது சேதன உரங்களின் பயன்பாட்டில் கூடிய கவனம் செலுத்துதல் உதாரணம் :- இலங்கை
- மரபணுத் தொழிநுட்பப் பயன்பாடு, நோய்களிலிருந்து தாக்குபிடிக்கக்கூடிய குறிப்பிட்ட காலத்தில் கூடியளவு விளைச்சல் தரக்கூடிய வகையில் விதைகளை அறிமுகஞ் செய்தல்
- விஷேட தர நெல் உற்பத்தி
  உதாரணம் :- பொன்னி அரிசி
- புதிய நுட்பமுறைகள் பயன்படுத்துதல் (பொதி செய்தல், உற்பத்தி)
- உலகின் பிரதான நெல் உற்பத்திப் பிரதேசங்களே நெல் வர்த்தகத்தினை மேற்கொள்ளும் பிரதேசங்களாகவும் காணப்படுதல்

05) i. இந்தியா
- சீனா
- பிரேசில்
- அவுஸ்திரேலியா
- நியூஸிலாந்து
- மெக்சிக்கோ
- ரஷ்யா
- பாகிஸ்தான்
- ஆர்ஜென்டீனா
- டென்மார்க்
- ஐக்கிய அமெரிக்கா

ii. a. பௌதீகக் காரணி
- புல் நிலம்
- நீர் வசதி

b. மானிடக் காரணி
- புதிய தொழிநுட்பம்
- பரந்த சந்தை வாய்ப்பு
- பயிற்றப்பட்ட தொழிலாளர்

iii. உலகின் விருத்தியடைந்த நாடுகள் வர்த்தக ரீதியான பாற்பண்ணையின் அனைத்துத் துறைகளிலும் முன்னிலையை வகிக்கின்றமை

- அபிவிருத்தியடைந்த நாடுகள் பால் தொடர்பான சந்தையைக் கட்டுப்படுத்தும் போக்கும் காணப்படுகின்றது.
- பாலைச் சேகரித்தல், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், சேகரிக்கப்படும் பாலின் அளவைக் கூட்டுதல் போன்றவற்றுக்கு விருத்தியடைந்த நுட்பமுறைகளைப் பயன்படுத்துகின்றமை
  உதாரணம் :- பால் தரும் பசுக்களுக்கு ஹோர்மோன்களைச் செலுத்துதல், மரபணுத் தொழிநுட்ப முறையில் அதிக பால் தரும் பசுக்களை உருவாக்குதல்
- திரவ நிலையிலான பால் மற்றும் உற்பத்திகளுக்கான சந்தைகள் விரிவடைந்தமை
- வெண்ணெய்க்கட்டி, பட்டர், யோகட் போன்ற பாலுடன் தொடர்புடைய உற்பத்திகள் அதிகரித்தமை

06) i. உயர் நிலத் தேயிலை :- நுவரெலியா
மத்திய நிலத் தேயிலை :- கண்டி, மாத்தளை, பதுளை

ii. $1900\,mm - 5400\,mm$ வரையான வருடாந்த மழைவீழ்ச்சி
- $15℃ - 27℃$ க்கு இடையிலான சராசரி வெப்பநிலை
- ஈரக்களிமண் மற்றும் செம்பூரான் மண்
- நீர் வழிந்தோடும் மென்சாய்வான நிலம்

iii.

a. ஈரான்
- ஈராக்
- ஐக்கிய அரபுக் குடியரசு
- சிரியா
- ஜோர்டான்

b. மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்
- அந்நியச் செலவாணி வருமானம் கிடைக்கும்
- தலாவருமானம் அதிகரிக்கும்
- உட்கட்டமைப்பு வசதி விருத்தியடையும்
- நாடு விருத்தியடையும்
- வெளிநாட்டு உறவுகள் அதிகரிக்கும்
- வெளிநாட்டு சந்தையில் இடம் கிடைக்கும்

07) i. 1. கடற்கரையோரம் சார்ந்த அல்லது கண்டமேடையில் இடம்பெறும் மீன்பிடி
2. ஆழ்கடல் மீன்பிடி

ii. மீன் உணவாகிய பிளாங்ரன் அதிகளவில் காணப்படுகின்றமை
- ஆறு, அருவி, கால்வாய்களால் கொண்டு வரப்படும் சேதன உணவுகள், துணிக்கைகள் கரையோரப் பகுதிகளில் படிவு செய்யப்படுகின்றமை
- சமுத்திர நீர் ஓட்டத்தினால் கடலின் அடியில் உள்ள மீன் உணவு நீரின் மேற்பரப்புக்கு எடுத்து வரப்படுகின்றமை

iii.

a. சாலை, நெத்தலி, ஹீருல்ல, எற்றாவளை, சூடை, முல்லவர், அலகொடுவா

b. மக்களின் உணவுத் தேவையான புரதத்தை அளிக்கின்றமை
- மீன்பிடிக் கைத்தொழிலுக்காகப் பரந்த உள்நாட்டு, வெளிநாட்டு சந்தை வாய்ப்பு
- வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருகின்றமை
- மீன்பிடி உற்பத்திகளை சந்தைப்படுத்துவதால் அந்நியச் செலவாணியைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருத்தல்
- மீன்பிடிக் கைத்தொழிலை விருத்தி செய்வதற்கு அவசியமான வளங்கள் காணப்படுகின்றமை

08) i. A. சீனா
B. இந்தியா
C. ஜப்பான்
D. ஐக்கிய அமெரிக்கா

ii. சக்தி மற்றும் வலு
- போக்குவரத்து
- உட்கட்டமைப்பு வசதி
- மூலப்பொருள்
- அரசாங்கக் கொள்கை
- சந்தை
- முதலீடு
- உழைப்பு

iii.

a. பண்புகள்
- நீண்ட காலம் நிலைத்து நிற்கும்
- உறுதித் தன்மை கொண்டது
- நெகிழ்வுத் தன்மை கொண்டது
- இலாபகரமானது
- அதிர்வுக்கு ஈடுகொடுக்கக் கூடியது
- ஏனைய உலோகத்துடன் கலந்தால் தரம் உயரும்
- மீள் சுழற்சிக்கு உட்படுத்த முடியும்

b. போக்குகள்
- பல்வேறு உற்பத்திக்கான அடிப்படை உலோகமாக எல்லா நாடுகளும் இரும்புருக்கைப் பயன்படுத்தியமை
- உற்பத்தி நவீனமயப்படுத்தப்பட்டுள்ளமை
- இரும்பை உருக்க நிலக்கரிக்குப் பதிலாக மின்சார உலைகளைப் பயன்படுத்துகின்றமை
- கடந்த காலத்தில் இரும்புருக்கில் முன்னனி வகித்த சில நாடுகள் படிப்படியாக சந்தையில் பின்னடைந்தமை
- உருக்குக்கான கேள்வி அதிகரிப்பால் கிழக்காசிய நாடுகளில் புதிய சந்தைகள் உருவாகியுள்ளமை (சீனா, தென்கொரியா)
- அபிவிருத்தியுடன் பல்வேறு இலத்திரனியல் தொழிநுட்பப் பயன்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- குறிப்பிட்ட நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் உருக்கை ஏற்றுமதி செய்யும் அதே நேரம் உருக்கை இறக்குமதியும் செய்கின்றன. (சீனா, தென்கொரியா)
- கடந்த காலங்களில் மூலப்பொருளாகிய இரும்புத்தாது, நிலக்கரி அமைந்துள்ள இடங்களிலேயே கைத்தொழில் அமையப் பெற்றது. ஆனால் இன்று மூலதனம், சந்தை ஆகிய வேறு காரணிகள் கைத்தொழிலின் அமைவிடத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

අපොස සා/පෙළ පසුගිය විභාග ප්‍රශ්නෝත්තර වට්ටම් සහිතව ගෙදරටම ගෙන්වාගැනීමට

**www.lol.lk**
**Learn Ordinary Level**

LOL.lk online Book Store

LOL.lk Learn Ordinary Level

අමතන්න - 071 777 4440/0756999990/071 8540371














































Online shopping

**www.lol.lk**
**Learn Ordinary Level**

DELIVERY ISLANDWIDE
SECURE PAYMENT

**LOL.lk**
online Book Store

071 777 4440/0756999990/071 8540371

## පළාත් ප්‍රශ්න පත්‍ර සහ පිළිතුරු පත්‍ර පොත්










## ආදර්ශ ප්‍රශ්න පත්‍ර සහ පිළිතුරු පත්‍ර පොත්










## කෙටි සටහන් පොත්










වට්ටම් සහිතව ගෙදරටම ගෙන්වාගැනීමට

**www.lol.lk**

**Learn Ordinary Level**

අමතන්න - 071 777 4440/0756999990/071 8540371

PAST PAPERS WIKI

# ප්‍රශ්නපත්‍ර පොත් ගෙදරටම ගෙන්ව ගන්න ඔන්ලයින් ඔඩර් කරන්න

WWW.LOL.LK

වෙත යන්න

BUY NOW

Secure Payments By PayPal VISA MasterCard DISCOVER NO PAYPAL ACCOUNT NEEDED!

ONLINE BOOK STORE

An evening of fun for young readers